بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ



# FRIDAY SERMON

19 APRIL 2019

(12 SHABAAN 1440 A H)

**HADHRAT MUHYI-UD-DIN AL-KHALIFATULLAH
MUNIR AHMAD AZIM**

## 19 APRIL / 2003 - 2019

## 19 ஏப்ரல் 2003 - 2019

**TAMIL VERSION / தமிழ் பதிப்பு**

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவ்வுஸும், அல்.ஃ.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

**அல்ஹம்துலில்லாஹ் சும்ம அல்ஹம்துலில்லாஹ்!** இன்று ஏப்ரல் 19-ம் தேதி, இந்நூற்றாண்டின் இறை அத்தாட்சி என்னும் கட்டமைப்பு (அல்லாஹ்வின் புறமிருந்து வந்த உண்மையான ஜம-அத்) ஆரம்பித்து 16 வருடங்கள் பின்னடைந்துள்ளது. இது ஒரு வரலாற்றுமிக்க நிகழ்வாகிறது. அஹ்மதியா இயக்கத்தின் நான்காவது கலீ.ஃ.பா மரணமடைந்த அன்றைய தினத்தில்தான் அல்லாஹ்வின் கையில் முதல் பை-அத்தும் செய்யப்பட்டது. இந்த பிரசங்கத்தை வழங்க நான் ஆரம்பிப்பதற்குமுன் அல்லாஹ்வின் புறமிருந்து பல முக்கியமான

செய்திகளைப் நான் பெறுவேன் என்று எண்ணுகிறேன் இந்த வெளிப்பாடுகள் எனது பிரசங்கத்தை நிகழ்த்தும் நேரங்களிலோ அல்லது அதற்கு பிறகோ நான் பெறலாம்.. எவ்வாறாகயிருந்தாலும் அச் செய்திகளை (அச்செய்தி அல்லாஹ்விடமிருந்து இறங்குகிறது. ஹுஸூர் அவர்கள் அதை உணர்கிறார்.) விரைவில் உங்களுடன், என் அன்பான தோழர்களிடம், மானிட குலத்திடம் நான் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.

[அல்லாஹ்வின் கலீ∴பா அதாவது கலீ∴பத்துல்லாஹ் அவர்கள் பின்னர் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமுடையவும், இறை அத்தாட்சிகளுடையவும் வரிசைக்கிரமமான வரலாறு மற்றும் இந்த முக்கியமான நாளைப் பற்றிய விவரங்களை பேசினார். இறை வெளிப்பாட்டை எழுதுவதற்கு எப்பொழுதும் தனது பக்கத்திலிருந்தவரும் (யாருக்கு அல்லாஹ் மிகுந்த உதவிகளைச் செய்தானோ அவர் அதாவது சபறுல்லாஹ் டூமூண் சாஹிப்) மற்றும் இந்நூற்றாண்டில் தோன்றிய இறை அத்தாட்சிகள் மீது நம்பிக்கை கொண்ட பிற நம்பிக்கையாளர்களும் ஆன்மீக கலந்தாய்வுக்காக இக்கோட்றே – போண்ஸில் (Quatre – Bornes) ஒன்று கூடிய அதே நாளில்தான் அஹ்மதியா இயக்கத்தின் 4 –வது கலீ∴பா அவர்கள் இறந்தார். அதே நாளில் அக்கூட்டத்தில் வைத்து நம்பிக்கையாளர்களிடமிருந்து பை-அத் வாங்குவதைக் குறித்து உங்களுக்கு ஏதேனும் வெளிப்பாடு கிடைத்ததா என்று சபறுல்லா டூமூண் சாஹிப் அவர்கள் அமீறுல் மூம்மினீன் முனீர் சாஹீப்பிடம் ஒரு கேள்வி கேட்டார்.

அந்த நேரத்தில், தனக்கு இதுவரை எந்த வெளிப்பாடும் கிடைக்கவில்லை என்று ஹுஸூர் அவர்கள் பதிலளித்தார். அல்லாஹ்விடமிருந்து அத்தகைய எந்த வெளிப்பாட்டையும் அதுவரை அவர் பெறாமலிருந்த நிலையில் வெளிப்பாட்டை பெற்றேன் என்று ஒரு போதும் அவருக்கு கூற இயலாது. ஏனெனில் வெளிப்பாடு பற்றி பொய் சொல்வது அல்லாஹ்வின் பார்வையில் மிக தீவரமான செயலாகிறது.

அந்த கூட்டத்தில் (Stady Circle) வைத்துதான் இறைவெளிப்பாடு வந்தது. அல்லாஹ் தன்னை சுயம் வெளிப்படுத்திக் கொண்டன். அதை தொடர்ந்து அக்கூட்டத்தில் வைத்து முதல் பை-அத் வாங்கப்பட்டது. அங்கிருந்த அனைவரும் அல்லாஹ்வின் கையில் (கலீ∴பத்துல்லாஹ்வின் கைகள் அதற்கு பிரதிநிதித்துவமாக இருந்தது) பை – அத் செய்தனர். எம். ராம்ஜான் அவரது மனைவி மற்றும் குழந்தைகள் அத்துடன் அன்றய நான் பை –அத் எடுத்துக்

கொண்ட வேறு சில நபர்களின் பெயர்களையும் ஹுஸுர் அவர்கள் குறிப்பிட்டார். மட்டுமின்றி ஹுஸுர் அவர்கள் ஒரு எச்சரிக்கையை அளித்தார். அந்த நேரத்தில் பை-அத் எடுத்துக் கொண்டு பின்னர் யார் அதிலிருந்து பின்திரும்பிக் கொண்டார்களோ அவர்கள் செய்ததைப் பற்றி சிந்தித்து மிக ஜாக்கிரதையாக இருக்கும்படி அவர்களை அறிவுறுத்தினார்.

மேலும் அல்லாஹ்வின் அருளால், உண்மையை பலப்படுத்துவதும், அவன் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு உதவுவதும் அல்லாஹ்வேதான் என்று ஹுஸுர் அவர்கள் கூறினார்கள். அல்லாஹ்வின் அருளால், அவன் பிற நாடுகளிலிருந்து பிற மக்களை அனுப்பி வைக்கின்றான். அவர்கள் இந்த உண்மையை ஏற்றுக் கொள்கின்றனர். இந்நூற்றாண்டில் தோன்றிய இறை அத்தாட்சிகளை ஒப்புக் கொள்கின்றனர் அத்துடன் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமில் அவர்கள் இணைந்துக் கொள்கின்றனர் அல்ஹம்துலில்லாஹ்! இவை அனைத்தும் அல்லாஹ்வின் கருணையால் மட்டுமே நிகழ்கின்றது என்றும் ஹுஸுர் குறிப்பிட்டார்.

இந்த அருளுக்குரிய நாளில்தான் (அதாவது 19 ஏப்ரல் 2019) கேரள ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் மகளிர் அமைப்பின் (சீராஜ்மாக்கீன்) கீழ் நடைபெறும் ஒரு கூட்டத்திற்கான துவக்க முயற்சியைக் கூறிப்பிட இந்த வாய்ப்பை ஹுஸுர் அவர்கள் பயன்படுத்திக் கொண்டார். அக்கூட்டம் நாளை அதாவது 20 ஏப்ரல் 2019 தேதியன்று நிறைவுபெறுகிறது. முபாரக் ஹோ (Mubarak Ho) என்று கூறி அவர்களை ஹுஸுர் வாழ்த்தினார். மேலும் அவர்களின் அம்முயற்சியின் வெற்றிக்கு பிரார்த்தனை செய்தார்].

## THE MONTH OF SHABAAN
## ஷ.்.பான் மாதம்

உங்களுக்கு தெரிந்தது போலவே, நாம் இப்போது ஷ.்.பான் மாதத்தில் இருக்கிறோம். இது இம்மாதத்தில் நான் செய்யும் இரண்டாவது வெள்ளிக்கிழமை போருரை ஆகிறது. எனவே நான் இன்று எனது போருரையின் உள்ளடக்கமாக ஷ.்.பானையும் அதன் முக்கியத்துவத்தையும் தேர்ந்தெடுத்துள்ளேன்.

இஸ்லாமிய நாட்காட்டியின்படி ஷ.ஃ.பான் எட்டாவது மாதமாகிறது. ஷ.ஃ.பான் மாதத்திற்குப் பிறகு நமது அருளுக்குரிய ரமலான் மாதம் வந்தடைகிறது. ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் ஷ.ஃ.பான் மாதத்திற்கு அனைத்து நிலையிலும் மிகுந்த முக்கியத்துவத்தை அளித்திருந்தார்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் தெரிவிக்கின்றார்.

**"அல்லாஹ்வின் தூதர் நோன்பு நோற்றிருப்பார், நீங்கள் நோன்பு நோற்பை ஒரு போதும் நிறுத்த மாட்டிர்களா என்று ஒருவர் கூறாதவரை அவர் நோன்பு நோற்பை கைவிடமாட்டார் மேலும், அவர் ஒருபோதும் நோன்பு நோற்கமாட்டாரா என்று ஒருவர் கூறாதவரை அவர் நோன்பு நோற்கமாட்டார். அல்லாஹ்வின் தூதர் ரமலான் மாதத்தைத் தவிர ஒரு மாதம் முழுவதும் நோன்பு நோற்பவராக இருப்பதை நான் பார்த்தலில்லை".** (புகாரி, முஸ்லீம்)

உஸாம இப்னு ஜைத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் நான் ரசூலுல்லாஹி (ஸல்) அவர்களிடம் கேட்டேன். **யா ரசூலுல்லாஹ் நீங்கள் ஷ.ஃ.பான் மாதத்தில் மிகுதியாக நோன்பு நோற்பதைபோல் பிற மாதங்களில் நோன்பு மிகுதியாக நோற்பதை நான் பார்த்ததில்லையே" அதற்கு திருநபி (ஸல்) அவர்கள் இம்மாதம் ரஜப் மற்றும் ரமலானுக்கு இடையில் காணப்படுகிறது. மக்கள் அதிக கவனம் செலுத்தாத ஒரு மாதமாகும். இந்த ஷ.ஃ.பான் மாதம் மிகவும் அருட்கள் நிறைந்ததாகும். இம்மாதத்தில் இரட்சகனாகிய அல்லாஹ்விடம் அடியார்களின் நற்செயல்கள் உயர்த்தப்படுகின்றன. எனவே எனது நற்செயல்கள் நான் நோன்பு நோற்ற நிலையில் உயர்த்தப்படுவதை விரும்புகிறேன்" என்று பதிலளித்தார்"** (அனஸாயி)

இம்மாதத்தில் திருநபி (ஸல்) அவர்கள் வழிபாடு செயல்களில் மிகுதியாக ஈடுபட விரும்பியிருந்தார் என்பது கதீஸ்"களிலிருந்து நமக்கு புரிந்துக்கொள்ளலாம். அவர் மூலமாக, அவருடைய நடைமுறைகள் மூலமாக, ஷ.ஃ.பான் மாதத்தில் நம்முடைய செயல்கள் அல்லாஹ்வின் சந்நிதியில் உயர்த்தப்படுகிறது என்பதை நாம் உணர்ந்து விட்டோம். ஆகவே நம்மால் இயன்றவரை இம்மாதத்தில் இறைவழிபாடு செயல்களில் ஈடுப்படவேண்டும். அத்துடன் அல்லாஹ் நம்முடைய வழிபாடு செயல்களை ஏற்றுக் கொள்கிறான் என்பதையும், நம்முடைய பாவங்கள் மற்றும் தவறுகளை மன்னித்துவிடுகின்றான் என்பதையும் நாம் உறுதிபடுத்த வேண்டும். ஹஸ்ரத் முஹம்மது முஸ்தபா

(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் மீது அந்த அளவு ஆழமான அன்பை வைத்திருந்தார். தன்னைப் பற்றி அல்லாஹ் மகிழ்ச்சி அடைவதற்காக அல்லாஹ்வின் வழியில் மிகுந்த தியாகங்களை செய்ய விரும்பினார்.

ஆகவே, ரஹ்மத்துன்லில் ஆலமீனாகிய முஹம்மது (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்வின் மீது இந்த அளவு மிகுந்த அன்பும் பயமும் இருந்திருக்கின்றதுயென்றால், பலவீனமான மனிதர்களாகிய நாம் அதைக்குறித்து கற்பனை செய்து பார்க்க வேண்டும். தூய்மையான நோன்பு நோற்பில் இருக்கும் போதுதான் அவருடைய செயல்கள் அல்லாஹ்விடம் உயர்த்தப்படுவதை அவர் விரும்பினர். அப்படியானால் ஒன்று கற்பனை செய்து பாருங்கள்! நாம் எந்த அளவு அதில் முன்னெச்செரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். நாம் பலவீனமான மனிதர்களாவோம். ஆகவே நாம் அவரது நடைமுறைகளை மிகவும் சரியான வழியில் பின்தொடர வேண்டும். அந்த தூய்மையான நடைமுறைகளில் எந்த பித்அத்தும் நாம் சேர்க்க கூடாது. ஏனென்றால், அவருடைய முன்மாதிரியை நாம் சரியான முறையில் பின்பற்றாமலிருந்தால், நாம் செய்வது நல்ல செயல்களாக இருக்காது. மாறாக அது பாவங்களாகத்தான் அமைந்துவிடும். மட்டுமல்ல, அந்நிலையில் சரியான பாதையை பின்பற்றுவதற்கு பதிலாக அல்லாஹ்வின் மார்க்கத்தில் நாம் பித் - அத்துகளை சேர்கவே செய்கிறோம்.

ஷ.ஃ.பான் மாதம் மிகச் சிறந்த மாதம் என்பது உண்மைதான். அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நடைமுறைகள் அதையனைத்தும் நமக்கு விரிவாக காட்டுகிறது.

## Shab - E - Baraat
## ஷ.ஃ.பேபராஅத்து

பைஹாகி அவர்களின் கூற்றுப்படி ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் ஷ.ஃ.பான் மாத நடுப்பகுதிக்கு (ஷ.ஃ.பான் 15 –ம் தேதியன்று இரவு) அளித்திருந்த முக்கியத்துவத்தைப் பற்றி நான் 05 ஜூன் 2015 தேதியன்று எனது வெள்ளிக் கிழமை போருரையில் பேசியிருந்ததை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அத்தினத்தில் திருநபி (ஸல்) அவர்கள் நோன்பு நோற்பதுடன் ஏராளம் இபாதத்து செயல்களில் ஈடுபட்டிருப்பார். மேலும் இந்த இரவைக்குறித்து திருநபி (ஸல்) அவர்கள் கூறியதாவது **“இந்த இரவில் மன்னிப்பு கோட்பவனை அல்லாஹ்**

**மன்னிப்பவனாக இருக்கின்றான். அவன் இரக்கத்தை தேவைப்படுவோர்களுக்கு அவன் இரக்கத்தை வழங்குபவனாகயிருக்கின்றான். பொறாமை கொண்டவர்களுக்கும் இதயத்தில் நோய்வாய்ப்பட்டவர்களுக்கும் அவன் நேரத்தை நீட்டி (அவர்கள் தங்களை சுயம் சீர்திருத்திக் கொள்வதற்கு) வழங்குகிறான்.”**

முஸ்லீம்களாகிய நாம் இந்த சுன்னத்தை மதிக்க வேண்டும் என்பது உண்மைதான். ஆனால் அண்ணல் முஹம்மது (ஸல்) அவர்கள் அதை எந்த அளவு கடைப்பிடித்தாரோ அந்த அளவிற்கு மட்டும் நாம் அதனை பின்பற்ற வேண்டும். நாம் வரம்புகளுக்கு அப்பால் செல்லக் கூடாது. இஸ்லாத்தில் இல்லாத நடைமுறைகளை நாம் பின்பற்றுவோமேயானால் அவற்றை நாம் இஸ்லாத்தில் சேர்த்துக் கெள்ளவே செய்கிறோம். இஸ்லாமிய நோக்கில் இது மிகவும் கண்டனத்திற்குரிய செயலாகிறது.

அல்ஹமதுலில்லாஹ்! அனைத்து முஸ்லீம்களும் குறிப்பாக மொரீஷியஸில் நான் காண்கிறேன், அதாவது இஸ்லாமிய மார்க்கத்திலும் திரு நபி (ஸல்) அவர்களின் சுன்னத்திலும் பித்அத்துகளை சேர்க்க கூடாது என்பதை அம்மக்கள் உணரத் தொடங்கியுள்ளனர். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் நடைமுறைகளை மட்டும் பின்பற்ற அவர்கள் முன்வந்துள்ளனர் உண்மையில் அது அவர்களுக்கு மிகப்பெரிய ஒரு படியாகிறது. அவர்கள் நேன்பு நோற்பதுடன் ஏராளமான இபாதத்துகளில் ஈடுபட்டு வருகின்றனர். பிராத்தனைகளில் மூழ்குகின்றனர். மேலும் அவர்கள் அல்லாஹ்வின் அருகாமையை அடைய விரும்புகின்றனர். இறந்துபோன தங்களது குடும்ப உறுப்பினர்களின் கல்லறைகளில் வைப்பதற்காக இனிப்புகள் கொண்ட இந்திய சிற்றுண்டிகளை அதாவது ஹல்வா, ரொட்டி போன்றவை சுடும், இஸ்லாமிற்கு மாறான நடைமுறைகளை அநேக முஸ்லீம்கள் கைவிட்டுள்ளனர்.

கல்லறைக்குச் சென்று இறந்தவர்களுக்காக அல்லாஹ்வை அழைத்து பிரார்த்தனை செய்வது தடைசெய்யப்பட்ட ஒன்றல்ல. மாறாக, ஷஃபான் 15-ம் தேதி மட்டுமல்ல, ஆண்டில் எப்போது வேண்டுமென்றாலும் அத்தகைய செயல்களில் ஈடுபடலாம். கல்லறைகளுக்கு சென்று இறந்தவர்களுக்காக பிரார்த்தனை செய்ய வேண்டும். ஏனெனில் இந்த நடைமுறை ஒருவருக்கு தனது நிலைமையைக் குறித்து நினைவூட்டுகிறது. ஒருநாள் தனக்கும் இந்நிலைமை வந்தடையும் என்ற எண்ணம் அவரிடம் வளர்க்க அது அகத்துண்டுதலாக

அமையலாம். அண்மையில் நிகழப்போகிற தனது மரணம் குறித்த எண்ணம் அவரை நேர் வழியில் நடத்திவிடலாம். மேலும் அல்லாஹ்வின் இன்பத்தை அறுவடை செய்ய நற்செயல்களில் ஈடுபட அவருக்கு அது துணை புரிந்து விடலாம். இன்ஷா அல்லாஹ்

அல்லாஹ்வும் அவனது தூதர் முஹம்மது (ஸல்) அவர்களும் நமக்கு அதாவது முஸ்லீம்களுக்கு அறிவின் சமுத்திரத்தை திரு குர் - ஆன் மற்றும் திரு சுன்னத்தின் மூலம் வழங்கியுள்ளனர். திருக்குர் ஆன் மற்றும் திரு சுன்னத்தை சரியான முறையில் பின்பற்றுபவர்கள் ஒருபோதும் வழிதவறமாட்டார்கள். இஸ்லாத்தின் போதனைகளையும், நம்முடைய அன்புக்குரிய நபி முஹம்மது (ஸல்) அவர்களின் நடைமுறைகளையும் மக்கள் சிதைக்கும் நேரம் வரும்போது, நம்முடைய தற்போதைய காலத்தைப்போலவே, அல்லாஹ் தனது பிரதிநிதிகளில் ஒருவரை பரிசுத்த ஆவியுடன் அனுப்பி மக்களுக்கு நேர்வழியை காண்பிக்கின்றான்.

ஒரு கலீ.:.பத்துல்லாஹ்வின் கடமை என்பது உங்களுக்கு எச்சரிக்கை செய்வதும், உங்களுக்கு அறிவுரை வழங்குவதும் ஆகும். பின்னர் அல்லாஹ்வின் விருப்பப்படியான இந்த அறிவுரை மற்றும் ஆலோசனைகளை நீங்கள் கவனத்தில் கொண்டு உங்கள் வழ்க்கையை சீர்திருத்த வேண்டுமா இல்லையா என்பதைப்பற்றி முடிவெடுக்க வேண்டியது உங்கள் கடமையாகும்.

ஷ.:.பான் 15 வது இரவு ரமலான் மாதத்தைப்போன்று அருள் நிறைந்த இரவாகிறது. குறிப்பாக ரமலானின் கடைசி பத்து இரவுகளும் இருள் நிறைந்ததாகும். அல்லாஹ் எல்லாவற்றையும் அறிபவனாகவும் காண்பவனாகவும் இருக்கின்றான் என்பதை முஸ்லீம்கள் உணரவேண்டும். மனிதன் என்ன நோக்கத்துடன் அத்தகைய செயல்களில் ஈடுபடுகின்றான் என்பதை அவன் நன்கு அறிபவனாக இருக்கின்றான். மனித இதயத்தின் ஆழங்களைக் கூட அவன் நன்கு அறிகின்றான். தனது பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படும் என்று நினைத்து ஒரு குறிப்பிட்ட நாளில் அவர் பல இறை வழிபாட்டுச் செயல்களில் ஈடுபட்டப்பிறகு, மறுநாள் அவர் மேலும் பாவச் செயல்களில் வீழ்கிறார் என்றால் அவரின் இத்தகைய இபாதத்துகளுக்கு அல்லாஹ்வின் பார்வையில் எந்த மதிப்புமில்லை.

ஷ.:.பான் என்பது ரமலான் மாத நோன்பு நோற்புக்காக முஸ்லீம்கள் தங்களை இயல்பாகவும், நல்லொழுக்கமாகவும், ஆன்மீகமாகவும் தயார்படுத்திக்

கொள்வதற்கான பயிற்சி மாதமாகிறது. ஷ.்.பான் மாதம் அவர்களை ரமலான் மாதத்திற்குத் தயார்படுத்துகிறது. மேலும் அனுமதிக்கப்பட்ட வரம்புகளை மீறாமல் இருப்பதற்கு நம்பிக்கையாளர்கள் முன்முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். நீங்கள் ஷீர்க்கில் விழக் கூடாது.

இஸ்லாம் பரிந்துரைத்தவற்றின் எல்லைக்குள் இருங்கள். மிகுந்த விருப்பத்துடனும் மரியாதையுடனும் நீங்கள் இறைவழிபாட்டு செயல்களில் ஈடுபடுங்கள். ஷ.்.பான் மாதத்தில் ந.்.பில் செயல்கள் கட்டாயமில்லை. ஆனால் ஒருவர் தானாகவே முன்வந்து அத்தகைய ஆன்மீக செயல்களில் ஈடுபடுகிறார் என்றால், அத்தகைய செயல்கள் ஷ.்.பான் மற்றும் ரமலான் மாதங்களில் மட்டுமல்ல, ஆண்டு முழுவதும் செய்யலாம். அத்தகைய இபாதத்துகளில் ஈடுப்படும் நபர் அல்லாஹ்வுடனும் அவனது தூதருடனும் மற்றும் இஸ்லாமுடனான தனது உறவின் முக்கியத்துவத்தை நன்கு அறிந்த ஒரு உண்மையான நம்பிக்கையாளராகிறார். அத்தகைய உண்மையான நம்பிக்கையாளர் இஸ்லாத்தின் போதைனைகள் படி செயல்படவும் மக்களுக்கு அறிவுரை கூறவும், அத்துடன் தன்னால் இயன்ற அனைத்தையும் செய்கிறார். அவர் இஸ்லாமிலிருந்து எதையும் அகற்றவோ அல்லது சேர்க்கவோ மாட்டார்.

மேலும் அல்லாஹ் மற்றும் அவனது தூதர் மீது நம்பிக்கை கொள்ளுகிற விசுவாசிகள் என்ற வகையில் அல்லாஹ் நம்மிடம் ஒப்படைத்துள்ள அனைத்து கடமைகளையும் நிறைவேற்ற வேண்டும் என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். ரஜப் மாதத்தில் நான் உங்களுக்கு அளித்த விளக்கத்தை நினைவில் கொள்ளுங்கள் அதாவது ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் மிராஜ் பயணத்தின்போது (ஆன்மீக பயணம்) ஒரு நாளைக்கு 50 முறை கட்டாய தொழுகையை செய்யும் படி தனது சமுதாயத்திடம் சொல்லுமாறு அல்லாஹ்வால் அவருக்கு அறுவுறுத்தப்பட்டிருந்தது. ஆனால் பின்னர் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் ஆலோசனைப்படி (தோற்றநிலையில்) ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் தொழுகையின் எண்ணிக்கையை குறைக்குமாறு அல்லாஹ்விடம் மன்றாடச் சென்றார். அதன் விளைவாக கட்டாய சலாத் ஐந்தாக மட்டும் குறைக்கப்பட்டது. இந்த ஐந்து நேர கட்டாய தொழுகைகளை, ஆரம்பத்தில் அவன் நமக்காக நியமித்த 50 நேர தொழுகைகளாக எண்ணப்படும் என்று அல்லாஹ் கூறினான். இது அல்லாஹ் நம்மீது காட்டிய இரக்கமாகிறது.

எனவே, முதன்மையாக, இந்த கட்டாய தொழுகைகளை நாம் மதிக்க வேண்டும், கடைப்பிடிக்க வேண்டும். ஒரு முஸ்லீம் முதன்மையாக கடமையாகக்கப்பட்ட செயல்களில் தன்னை உறுதியாக நிலைநிறுத்திக் கொள்ளவேண்டும். அதன் மீது தன்னை உறுதியாக நிலை நிறுத்திக் கொண்ட பிறகு அல்லாஹ்வின் மீதான தனது உறவை மேலும் வலுப்படுத்துவதற்காக ந.ஃ.பில் செயல்களில் ஈடுபட்டுக் கொள்ளலாம். அல்லாஹ்வால் பரிந்துரைக்கப்பட்டிருக்கும் ஒரு ந.ஃ.பிலான செயல் உள்ளது அதாவது அச்செயலை நமது உன்னதமான தூதர் (ஸல்) அவர்கள் தஹ்ஜுத் என்று நமக்கு கற்பித்துள்ளார். குத்சியான ஒரு கதீஸில் அல்லாஹ் கூறியிருப்பதாக காணலாம்.

அபூகுறை (ரலி) அவர்கள் தெரிவிக்கின்றார். அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். **"நம் இரட்சகனாகிய அல்லாஹ் ஒவ்வொரு இரவும், அதாவது இரவின் இறுதி மூன்றில் (1/3) அல்லாஹ் முதலாவது ஆகாயத்தில் இறங்கிவருகின்றான். பின்னர் அவன் கூறுவான் உங்களுள் எவர் என்னிடம் பிரார்த்தனை செய்கின்றாரோ அவரின் பிரார்த்தனைக்கு நான் பதிலளிக்கிறேன். உங்களுள் எவர் என்னிடம் ஏதேனும் கேட்கின்றாரோ அதை நான் அவருக்கு வழங்குவேன். உங்களுள் எவர் என்னிடம் பாவ மீட்சியைத் தேடுகிறரோ அவரின் தௌபாவை நான் ஏற்கிறேன்."** (புகாரி, முஸ்லீம், மாலிக், திர்மிதி, அபூதாவூத்) முஸ்லீம் தெரிவித்துள்ள மற்றொரு கதீஸ்படி, அச்செயல் விடியற்காலைவரை தொடர்கிறது.

மற்றொரு குத்சியான கதீஸில் அனஸ் (ரலி) அவர்கள் தெரிவித்திருப்பதாக காணலாம்.

திரு தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

எல்லாம் வல்ல அல்லாஹ் கூறினான். **ஆதமின் மக்களே! நீங்கள் என்னை அழைத்து பிரார்த்தனை செய்யும் காலம்வரை நீங்கள் செய்த தவறுகளை நான் மன்னிப்பேன், அதில் எந்த வருத்தமும் எனக்கில்லை. ஆதமின் மக்களே! உங்கள் பாவங்கள் வானத்தின் மேகங்களை எட்டுமளவிற்கு உயர்ந்ததாக இருந்தால் கூட நீங்கள் பாவமீட்சிக்காக மன்றாடினால் நான் உங்களை மன்னிப்பேன். ஆதமின் மக்களே! பூமியளவுக்கு மிகப் பெரிய பாவங்களுடன் நீங்கள் என்னிடம் வந்திருந்தாலும், நீங்கள் என்னை எதிர்கொள்ள நேர்ந்தாலும் எனக்கு எந்த குட்டாளியையும் இணைவைக்காமல் நீங்கள் வந்தால் நான்**

**உங்களை மனினிப்பவனாக இருக்கிறேன்.** (திர்மிதி, அஹமது, இப்னுஹபல், இப்னுமாஜ).

நான் எனது அனைத்து சீடர்களுக்கும், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் மீதமுள்ள உம்மத்திற்கும், ஒவ்வொரு நாளும் இறைவழிபாட்டுச் செயல்களில் ஈடுபடுமாறு அறிவுறுத்துகிறேன். ஏனென்றால் உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு நாளும் அல்லாஹ் அளிக்கும் பரிசாகும். அதன் மூலம் உங்களுக்கு அவனுடைய இருப்பை அங்கீகரிக்க முடிந்துவிடும். உங்கள் தவறுகளுக்கு அல்லது பாவங்களுக்கு அல்லாஹ்விடமிருந்து மன்னிப்பை பெற ஒரு குறிப்பிட்ட நாளுக்காக காத்திருக்க வேண்டாம். அல்லாஹ் உங்களுக்கு அளித்த அருளுக்குரிய இரவுகளை அனுபவியுங்கள். ஆம், ஆனால் அல்லாஹ்வின் மன்னிப்பை பெறுவதற்கான இரவு என்று இந்த இரவை மட்டும் நம்பாதீர்கள். இந்த இரவில் உங்கள் அனைத்து தவறுகள் மற்றும் பாவங்களை அல்லாஹ் மன்னித்துவிட்டான் என்று நினைத்து மகிழாதீர்கள். ஏனெனில் உங்கள் அனைத்து பாவங்கள் மற்றும் தவறுகளை அல்லாஹ் மன்னித்துவிட்டான் என்று நம்பிக்கை கொண்டால், மீண்டும் இந்த உலகத்தின் ஈர்ப்புகளுக்கு நீங்கள் அடிபணிந்து, பாவங்களில் வீழ்ந்து விடுவீர்கள்.

பௌதீகம் மற்றும் ஆன்மீகத்திற்கு இடையே ஒரு சமநிலையை கையாள நீங்கள் கற்றுக்கொள்ளவேண்டும். அல்லாஹ்வின் உதவியை நாடிக் கொண்டு அத்தகைய ஒரு சமநிலைக்காக நீங்கள் முயற்சி செய்யுங்கள். அவ்வாறேயானால் அல்லாஹ் உங்களிடம் ஒப்படைத்த பணிகளில் நீங்கள் வெற்றி பெறுவீர்கள். அல்லாஹ் நம்மை பூமியில் அனுப்பிய போது ஒரு மாபெரும் பணியை நாம் ஒவ்வொருவரிடத்திலும் ஒப்படைத்திருந்தான். நாம் சாத்தானின் உதவியாளர்களாக மாறக் கூடாது. மாறாக அல்லாஹ்வின் இன்பத்தை நம்மீது ஈர்க்கும் செயல்களில் மட்டும் நாம் ஈடுபட்டிருக்க வேண்டும். இன்ஷா அல்லாஹ், ஆமீன்.

**Translated by:**
*Naib Amir Azim Ahmad*
*7339689239*

## ISSUED BY

**SIRAJ DEEN SAHIB**
Amir Tamilnadu state, India
Tamilnadu Contact
No: 7502272774

**R. JAMALUDDIN RAOTHER SAHIB**
Amir Kerala South Zone, India
Kerala contact
No: 9447001832

**PUBLISHED BY:**
**JAMAAT-UL-SAHIH-AL-ISLAM**
**KALIAKKAVILAI BRANCH**
**(TAMILNADU AND KERALA BORDER)**
**Ph. No: 9789180817, 9171977109**